# பாசிச பா.ஜ.க. வீழட்டும்! இந்தியப் பொருளாதாரம் மீளட்டும்! – 2

**ஒ**ரு லிட்டர் பெட்ரோல், 10 லிட்டர் டீசல் என்று நம் வாகனங்களுக்கு நிரப்பிய காலம் மாறி, 100 ரூபாய்க்கு பெட்ரோல், 1000 ரூபாய்க்கு டீசல் என்று நிரப்ப ஆரம்பித்த தன் விளைவு, கடந்த 10 ஆண்டுகளில் மோடிஅரசால் கட்டுக்கடங்காமல் ஏற்றப்பட்ட பெட்ரோல், டீசல்,கேஸ் விலை உயர்வும், அதனால் சாமானிய குடும்பங்கள் சந்திக்கும் பெரும் பொருளாதார இழப்பும் இங்கே சிலருக்குப் புரியாமல் போய்விட்டது.



பெட்ரோல், டீசல், கேஸ் ஆகியவற்றின் மீதான வரியை கண்மூடித்தனமாக மோடி அரசு உயர்த்தியதால் சாமானிய குடும்பங்களின் மாத பட்ஜெட்டில் 2000 ரூபாய் முதல் 5000 ரூபாய் வரை துண்டு விழுந்தது. இதை சரிகட்ட அந்தக் குடும்பங்கள் தங்களின் அத்தியாவசிய தேவைகளைக் குறைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இன்னும் சொல்லப்போனால், தங்களின் ஆரோக்கியமான உணவுகளைத் தவிர்க்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இவையெல்லாம் இந்தியப் பொருளாதாரத்தில் மட்டுமின்றி, இந்தியர்களின் ஆரோக்கியத்திலும் பெரும் சிதைவை ஏற்படுத்தின. மோடி அரசின் புத்திக்கூர்மையற்ற பொருளாதார அனுகுமுறையால் மக்கள் சந்தித்து வரும் அவலங்களை நினைவுபடுத்த வேண்டியது நம் கடமை அதையே இக்கட்டுரை செய்கிறது.!




2014 தேர்தலில் மோடி பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்ட போது, அவரைச் சுற்றி இருந்தவர்கள் சொல்லியவை உங்களுக்கு நினைவிருக்கிறதா ? மோடி ஆட்சிக்கு வந்தால், பெட்ரோல், டீசல் விலை 40 ரூபாய்க்கும் கீழ்கொண்டு வரப்படும். டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 40 ரூபாயாகும் , சிலர் ஒருபடி மேலே போய் 1 டாலர் 1 ரூபாய் என்று மோடி மாற்றுவார் என்றெல்லாம் சொல்லி மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றது பா.ஜ.க..

60 மாதங்கள் ( அதாவது 5 ஆண்டுகள் ) மட்டும் எனக்குத் தாருங்கள், நான் இந்தியாவையே புரட்டிப் போடுவேன் என்றார் மோடி. உண்மைதான்... இந்தியப் பொருளாதாரத்தைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டு இந்தியர்கள் நிமிரவே முடியாதபடிசெய்து விட்டார் மோடி.

குறிப்பாக பெட்ரோல், டீசல், கேஸ் விலைக்கு வருவோம். இருசக்கர வாகனத்தில், மீன் வியாபாரம் செய்வோர் , காய்கறி வியாபாரம் செய்வோர், அலுவலகங்களில் பணி செய்வோர், தனியார் வணிக நிறுவனங்களில் பணி செய்வோர்,

மருந்து விற்பனைப் பிரதிநிதிகள், என்று தினசரி வாழ்வில் இருசக்கர வாகனத்தை அதிகம் பயன்படுத்துவோர் நிறைந்து வாழும் நாடு இது. இப்போதெல்லாம் வீட்டில் இரண்டு இருசக்கர வாகனங்கள் இருக்கின்றன.

தமிழ் கேள்வி
தி.செந்தில்வேல்
மூத்த
ஊடகவியலாளர்



இந்தச் சூழலில், மோடி பிரதமராகப் பதவியேற்ற காலகட்டத்தில் 60 ரூபாய் என்ற அளவில் இருந்த பெட்ரோல் விலையும், 49 ரூபாய் என்ற அளவில் இருந்த டீசல் விலையும் இன்று, 102 ரூபாயாகவும் 94 ரூபாயாகவும் உயர்ந்து நிற்கின்றன.

40 முதல் 50 விழுக்காடு வரை பெட்ரோல் டீசல் மீதான விலை மோடியின் ஆட்சியில் உயர்ந்துள்ளது. கேஸ் விலையைப் பொறுத்த வரை 400 ரூபாய் என்ற அளவில் இருந்த கேஸ் சிலிண்டர் விலை இன்று 1000 ரூபாயைத் தொட்டு நிற்கிறது.

இரண்டு அல்லது இரண்டிற்கும் மேற்பட்டோர் உங்கள் குடும்பத்தில் இருசக்கர வாகனத்தை பயன்படுத்துபவர்களாக இருந்தால் நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள் மாதம் கூடுதலாக எரிபொருளுக்கு மட்டும் எவ்வளவு செலவாகிறது என்று.

பெட்ரோலுக்கு மட்டும் குறைந்தபட்சம் மாதம் 1000 ரூபாயும் அதிகபட்சம் 3000 ரூபாய் வரையும் சாமானிய குடும்பத்தின் சுமை உயர்ந்துள்ளது. இது தவிர கேஸ் விலை ஏற்றம், எண்ணெய் பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின்விலை ஏற்றம் அனைத்தையும் கணக்கிட்டால் மாதம் குறைந்தபட்சம் 5000 ரூபாய் சாமானிய குடும்பத்தின் சுமை அதிகரித்துள்ளது. எனில், ஆண்டுக்கு 60,000 ரூபாய் வரை கூடுதல் செலவினத்தை சாமானியக் குடும்பத்தின் தலையில்ஏற்றி விட்டார் மோடி.

1 கிராம் தங்கம் சுமார் 5000 ரூபாய். மாதம் 1 கிராம் தங்கத்திற்கான காசை மோடியின் பொருளாதாரத் தவறுகளால் நாம் இழந்து கொண்டிருக்கிறோம். ஆண்டுக்கு 12 கிராம் தங்கத்தை வாங்கியிருக்க முடியும், நினைத்துப் பார்க்கஉங்களுக்கு மலைப்பாக இருக்கும் ஆயினும் இதுதான் உண்மை. மோடி ஆட்சி செய்த இந்த 10 ஆண்டுகளில் இதுபோல் நாம் இழந்து நிற்பது ஏராளம். கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் சுமார் 60 கிராம். அதாவது, சுமார் ஏழரை சவரன் தங்கத்திற்கான பணத்தை நாம் மோடியின் தவறான பொருளாதாரக் கொள்கையால் இழந்திருக்கிறோம்.இது சாமானிய குடும்பத்திற்கு எத்துணை பெரிய இழப்பு.

இதில் இன்னும் கொடுமை என்னவென்றால், கச்சா எண்ணெய் விலை பேரல் ஒன்றிற்கு 105 டாலராக இருந்த போது பெட்ரோல் விலை சுமார் 60 ரூபாயாகவும், டீசல் விலை சுமார் 49 ரூபாயாகவும் இருந்தது.

ஆனால், சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதளபாதாளத்திற்குச் சென்று பேரல் ஒன்று 55 டாலராக குறைந்த போது, அதன் பலனை மக்களுக்கு அளிக்காமல் மோடி அரசு வரியை உயர்த்திக் கொண்டே போனது.

ஒரு லிட்டர் பெட்ரோலின் மீதான வரியை 9 ரூபாய் 48 காசில் இருந்து 32 ரூபாய் 33 காசுகளுக்கும் மேல் உயர்த்தியது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இதனால் கச்சா எண்ணெய் விலை குறைந்தும் பெட்ரோல் , டீசல் கேஸ் விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்தது. இதில் மிகப் பெரிய கொடுமை என்னவென்றால், கொரோனாவால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த காலம் அது. முழு அடைப்பால் சிறு, குறு வணிகர்கள் சாலையோர வியாபாரிகள் வாழவே வழியின்றித் தவித்தபோது, பெட்ரோல், டீசல், கேஸ் விலை விண்ணைத் தொட்டது. காரணம் மோடியின் தவறான பொருளாதாரக் கொள்கை.

இப்படி மக்கள் மாண்டு மடிந்து கொண்டிருக்கும்போது, கொஞ்சமும் ஈவு இரக்கமின்றி மக்களிடம் இருந்து வரி என்ற பெயரில் வழிப்பறி செய்தது பாஜக அரசு. அதிலும் இந்த வரிகளில் பெரும்பாலான வரிகள் செஸ் வரிகளாக போடப்பட்டதால் அதில் மாநிலங்களுக்கு எந்தப் பகிர்வும் இல்லை என்றார் மோடி. இப்படி மக்களை பெரும் துயருக்கு மோடி தள்ளிக்கொண்டிருந்தபோது, தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது,

மாண்புமிகு முதலமைச்சராக நம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பதவியேற்றார். அவர் பொறுப்பேற்ற உடனேயே, கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு உதவிடும் வகைகயில் குடும்ப அட்டைதாரர்களுக்கு நிவாரண நிதியாக வழங்குவதாகச் சொன்ன 4000 ரூபாயில் உடனடியாக முதல் தவனையாக 2000 ரூபாய் வழங்கப்பட்டது.

ஆவின் பால் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டது. பெட்ரோல் விலையில் லிட்டருக்கு 3 ரூபாயை மாநில தி.மு.க. அரசு குறைத்தது. ஆனால், அடுத்த சில வாரங்களிலேயே மோடி அரசு வரியை ஏற்றி மீண்டும் மக்களுக்கு துயரத்தைப் பரிசளித்தது.

> **மோ**டி அரசு மக்களிடம் இருந்து பறித்துக் கொண்டே இருக்கிறது மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு மக்களுக்கு கொடுத்துக் கொண்டே இருக்கிறது. மோடி அரசால் 10 ஆண்டுகளில் சாமானிய குடும்பம் ஒன்று சுமார் 6 லட்சம் ரூபாய் வரை இழப்பை சந்தித்துள்ளது.அதே சமயம் கட்டணமில்லா மகளிர் பேருந்து, புதுமைப் பெண் திட்டம் பெட்ரோல் மீதான திமுக அரசின் வரி குறைப்பு உள்ளிட்ட திட்டங்களால் மக்கள் சேமித்தது அதிகம்.
>
> ஒரு பக்கம் நம்மைச் சுரண்டும் மோடி தலைமையிலான பாஜக அரசு. மறுபுறம் நம் கண்ணீர் துடைக்கும் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு. ஒரு ஆட்சியாளர் எப்படி ஆட்சி செய்யக் கூடாது என்பதற்கு மோடி உதாரணமாக இருக்கிறார்.

மோடி அரசு மக்களிடம் இருந்து பறித்துக் கொண்டே இருக்கிறது மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு மக்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. மோடி அரசால் 10 ஆண்டுகளில் சாமானிய குடும்பம் ஒன்று சுமார் 6 லட்சம் ரூபாய் வரை இழப்பைச் சந்தித்துள்ளது.அதே சமயம் கட்டணமில்லா மகளிர் பேருந்து, புதுமைப் பெண் திட்டம், பெட்ரோல் மீதான திமுக அரசின் வரி குறைப்பு உள்ளிட்ட திட்டங்களால் மக்கள் சேமித்தது அதிகம்.

ஒரு பக்கம் நம்மைச் சுரண்டும் மோடி தலைமையிலான பாஜக அரசு; மறுபுறம் நம் கண்ணீர் துடைக்கும் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு. ஒரு ஆட்சியாளர் எப்படி ஆட்சி செய்யக் கூடாது என்பதற்கு மோடி உதாரணமாக இருக்கிறார்.

**ஒரு நல்லாட்சி எப்படி நடக்க வேண்டும் என்பதற்கு நம் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் உதாரணமாக இருக்கிறார்.** அந்த 'திராவிட மாடல் ஆட்சி' இந்தியா முழுவதும் மலரட்டும். திராவிட மாடல் ஆட்சியால் அடைந்த பலன்களை அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

இந்தியா கூட்டணியை ஆதரிப்போம். பாசிச பா.ஜ.க. வீழட்டும். இந்தியா வெல்லட்டும்.!



இராணிப்பேட்டை மாவட்டம் விளாப்பாக்கம் பேரூராட்சி அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளியில் 6 வது நிதிக்குழு மானியம் திட்டத்தின் கீழ் ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்படவுள்ள 8 வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டிடம் மற்றும் கழிப்பறைகள் கட்டும் பணிக்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் அடிக்கல் நாட்டினார்கள். இதில் மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., பேரூராட்சித் தலைவர் மனோகரன், ஒன்றிய செயலாளர்கள் ஒன்றியக் குழுத் தலைவர் அசோக், துணை தலைவர் ரமேஷ், பேரூராட்சி துணைத் தலைவர் ரேகா, கார்த்திகேயன், திமிரி பேரூர் செயலாளர் தாமோதரன் மற்றும் தேர்ந்தெடுக்கப் பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.




தி.மு.கழக இலக்கிய அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.இதில் கழக இலக்கிய அணி பொருளாளர் டாக்டர் நா. சந்திரபாபு தயாரித்து வழங்கிய 'எம்.கே. ஸ்டாலின் சார் வி லவ் யூ ' என்ற கழகப் பிரச்சார பாடல் ஒளிப்பட நாடாவை கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் வெளியிட இலக்கிய அணி தலைவர் புலவர் இந்திரகுமாரி,இலக்கிய அணி செயலாளர் வி.பி. கலைராஜன் பெற்றுக் கொண்டனர்.உடன் புரவலர் வழக்கறிஞர் நா.செந்தில்,பெருநாழி போஸ்,பிரம்மபுரம் பழனி,பாடலாசிரியர் வெ.மதன்குமார் உள்ளனர்.